**O.S. .No. 194/2022 நாள் 18.10.2023 PW 1– திரு. ஆகாஷ் கண்ணன்**

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து முதல் விசாரணை செய்யப்படுகிறார்.)

முதல் விசாரணை தொடர்ச்சி

அசல் வழக்கு எண். 66/2015 முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம் தீர்ப்புரை தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ–3, மேற்படி வழக்கின் தீர்ப்பாணை வா.சா.ஆ–4, 12.07.2023 தேதியில் எடுக்கப்பட்ட தங்கதுரை அவர்களின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–5, 16.02.1944 தேதியில் தங்கதுரை அவர்களுக்கு தங்கபழ நாடார் அவர்கள் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–6, வேலாண்டி அவர்களின் இறப்பு சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.7, 13.06.200 தேதிய RTI ல் பெறப்பட்ட சர்வே எண்.642/21 க்குரிய அ பதிவேடு வா.சா.ஆ– 8, 29.01.2016 தேதிய கோட்டாட்சியரின் உத்தரவின் நகல் வா.சா.ஆ–9, 23.03.2020 தேதிய தங்கதுரை நாடார் அவர்கள் எழுதி வைத்துள்ள உயில் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–10, (அசல் உயில் ஆவணமானது நான் சிறுவயதாக இருக்கும்போது எழுதி வைத்ததால் அது காணாமல் போய்விட்டது. ) பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும்.